**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.12.12 சபையமர்வு அறிக்கை**

2022.12.12ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும்.

## 01.கடந்தகால சபை அறிக்கையை சமர்ப்பித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையமர்வின் போது மஸ்கெலியாவில் உள்ள லொறி தரிப்பிடம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது அது அறிக்கையில் இணைக்கப்படவில்லை.

**திருத்தம்**

குறித்த வாகன தரிப்பிடத்தில் வளைவு பகுதி தவிர்த்து எஞ்சிய பகுதியில் வாகனத்தை தரித்து வைக்கவும் ஏனைய வாகனங்களுக்கு வேறு ஒரு இடத்தை ஒதுக்கித்தரவும் சபை தீர்மானித்தது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபைக்கு முன்னைய சபையில் முன்வைக்கப்பட்ட சமூக நலன்புரி கூப்பன் சம்பந்தமான விடயத்திற்கு இன்னமும் கடிதம் அனுப்பப்படவில்லை, அது தொடர்பாக கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். காலமும் மிகவும் கால தாமதமாகிவிட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவ்விடயம் தொடர்பாக பிரேரணை பகுதியில் வரவில்லை, ஏனைய விடயங்கள் பகுதியில் தான் கலந்துரையாடப்பட்டுள்ளது, அவ்வாறு கடிதம் அனுப்பாமல் இருந்தால் கடிதமனுப்புவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுவோம்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

திருத்தங்களுடன் கடந்தமாத நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

| |
|---|
| 2022.11.14ம் திகதி நடைபெற்ற சபையமர்வின் அறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 02. கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட அறிவித்தல்.

கடந்த காலங்களில் மஸ்கெலியா நகரிலும் அண்மித்த பகுதியில் உள்ள இடங்களுக்கான காணி உறுதிப்பத்திரம் தொடர்பாக பேசப்பட்டு, கடந்த 26ம் திகதி மஸ்கெலியாவில் உள்ள அம்பாள்ஸ் மண்டபத்திற்கு மாவட்ட, பிரதேச செயலாளர் அவர்களும் ஏனைய அதிகாரிகளும் இது தொடர்பாக பேசுவதற்கு வருகை தந்திருந்தனர். இதில் நகர வர்த்தகர்களும் நகர மக்களும் கலந்துக்கொண்டிருந்தனர். அன்றைய தினம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்கள் அவ்விடத்திற்கு சமூகமளித்து இவ்வுறுதிப்பத்திரம் தொடர்பான ஆவணங்களை திரட்டுமாறு கூறியிருந்தார். எதிர்காலத்தில் இது தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.
அத்துடன் 2023ம் ஆண்டுகான மஸ்கெலியா பிரதேச சபையின் வரவு செலவு திட்ட அறிக்கை மக்களின் பங்களிப்பினூடாக சிறந்த முறையில் தயாரிக்கபட்டுள்ளமையினால் அதனை வரவேற்கும் வகையில் டிரான்பெரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் நடத்தும் முக்கியமாக மாநாட்டில் கலந்துக்கொள்ள எமது சபைக்கும் அழைப்பு விடுத்துள்ளது, இது எமது சபைக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அண்மையில் நானும் கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் அவர்களும் நுவரெலியா சென்ற போது, காணி கச்சேரி தொடர்பாக ஒரு கூட்டம் நடைபெற்றது. முழு அம்பகமுவயிலும் 58 விண்ணப்பங்கள் தான் கிடைக்கப்பெற்றது என்று கூறப்பட்டது. அந்த 58ற்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. அங்கு இடாப்பில் பெயர் இருந்தால் வேலை நடக்கின்றது. சில விடயங்கள் நடந்துக்கொண்டு தான் உள்ளது. தவிசாளர் அவர்கள் காணி சீர்திருத்த ஆணையாளருடன் பேசி இவற்றுக்கான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டால் நன்மையாக அமையும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த 26ம் திகதி காணி சீர்திருத்த குழுவில் இருந்து வந்திருந்தனர். அதன் பின்னர் சபையினூடாக தான் அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டு பிரதேச செயலகத்தில் இருந்து ஆவணங்களை பெற்றுள்ளனர், நடவடிக்கை எடுக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நகரப்பிரதேசத்திற்கு சரி, நகர் புறமும் தோட்டப்புறத்திற்கும் இல்லாமல் இடைப்பட்ட பகுதியில் உள்ள இடத்தில் உள்ளவர்கள் உள்ளனர் அவர்களுக்கு என்ன செய்வது. இவர்களுக்கு ஒரு முடிவு வேண்டும் தானே?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயத்திற்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, இவ்விடயம் தேடிபார்க்கும் போது இவ்விடயம் சபையினூடாக கொண்டு வரப்பட்டுள்ளது என்பதனை மறக்க கூடாது. கடந்த 06 மாதத்திற்கு முன்னர் சபையில் நோட்டன் வீதி தொடர்பாக கொண்டு வந்த பிரேரணைக்கு அமைவாக 03ம் மாதம் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அமைவாக அதற்கு நடவடிக்கை எடுத்து தான் 06ம் மாதம் அளவில் கினிகத்தேனயில் காணி கச்சேரி செய்தனர். அப்போது 175 பேர் விண்ணப்பித்திருந்தனர். இக்காணி கச்சேரி நடப்பதற்கு மஸ்கெலியா பிரதேச சபையும் பிரதான காரணமாக இருந்துள்ளது. இதற்காக அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 03. பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் முறைப்பாடுகளை சபைக்கு முன்வைத்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - கௌரவ உறுப்பினர் கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்கள்

**விடயம்** - 2022.12.12ம் சபைக்கான விடுமுறை கடிதம்

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்களின் விடுமுறைக்கடித்தை நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 02**

கௌரவ உறுப்பினர் கே.எல்.ஏ.ரஞ்சனி அவர்களின் விடுமுறையிற்கு சபை ஏகமனதாக அனுமதி வழங்கியது.

**கடித இல 02**

**அனுப்புனர்** - வருமான பரிசோதகர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2023ம் ஆண்டுக்கான வரி அறவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

2023ம் ஆண்டுக்கான வரி அறவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் தொடர்பான விடயத்திற்கு சபை ஏகமனதாக அனுமதி வழங்கியது.

**மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட வரி அறவிடும் பிரதேசங்களில் அறவிடப்படும் வரி அறவீட்டு சதவீதத்தை அதிகரிப்பது தொடர்பான விடயம் சபையில் கௌரவ உறுப்பினர்களினால் கலந்துரையாடப்பட்டது.**

**தீர்மான இல 04**

மேற்குறித்த விடயம் தொடர்பாக கௌரவ ஆளுனரின் ஆலோசனையினை பெற கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கடித இல 03**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - மஸ்கெலியா பிரதேச சபைக்கு கொள்வனவு செய்யப்படும் கலி இயந்திரத்திற்கான மொத்த கொள்வனவு தொகையான 2,550,000.00ரூபாவில் 1,600,000.00ரூபா வங்கிக்கடன் மூலமாகவும் மிகுதி தொகையான 950,000.00ரூபாவினை சபை நிதியினூடாக செலுத்துவதற்கு சபை அனுமதியினை கோரியுள்ள கடிதம்.

**தீர்மான இல 05**

கடன் தொகைக்கு மேலதிகமாக செலுத்தப்பட வேண்டிய தொகையினை சபை நிதியினூடாக செலுத்த சபை ஏகமனதாக அனுமதி வழங்கியது.

**கடித இல 04**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2023ம் ஆண்டுக்கான புதிய விநியோகத்தர்களை பதிவு செய்தல் அவ்விளம்பரத்தை பத்திரிகையில் பிரசுரித்தல் என்பவற்றிற்காக சபை அனுமதியினை கோரியுள்ள கடிதம்.

**தீர்மான இல 06**

2023ம் ஆண்டுக்கான புதிய விநியோகத்தர்களை பதிவு செய்தல் அவ்விளம்பரத்தை பத்திரிகையில் பிரசுரித்தல் என்பவற்றிற்காக சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 05**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2023ம் ஆண்டுக்கான செயற்றிட்ட அறிக்கைக்கான சபை அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பான விடயம்.

**தீர்மான இல 07**

2023ம் ஆண்டுக்கான செயற்றிட்ட அறிக்கையிற்கு சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 06**

**அனுப்புனர்** - தொழிநுட்ப அதிகாரி - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் காணப்படும் உரம் சலிக்கும் இயந்திரத்திற்கான Net இனை பெற்றக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 08**

மேற்குறித்த விடயத்திற்கு சபை அனுமதி வழங்கப்பட்டது.

**கடித இல 07**

**அனுப்புனர்** - மகளீர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்.

**விடயம்** - பெண்களின் நலத்திட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சியை நடத்துவது தொடர்பான கடிதம்.

**கடித இல 08**

**அனுப்புனர்** - சசிகாந்தன், இல 01, பிரதான வீதி சாமிமலை.

**விடயம்** - சாமிமலையில் உள்ள மீன் கடை தொடர்பான முறைப்பாட்டு கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

மேற்குறிப்பிட்ட கடிதம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

முன்னால் உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அவர்களிடம் சபைக்கு நிதி பற்றாக்குறை உள்ளது என்று கூறி அவர்களிடம் கேட்டத்திற்கு அமைய வழங்கப்பட்ட நிதியில் தான் அந்த கடையினை அமைத்தோம். அக்கடையினை

வைக்கும் போது ஓல்டன் தோட்ட நிர்வாகம் அவ்விடம் அவர்களுக்கு சொந்தமானது என்று வழக்கு தொடுத்திருந்தது. அதற்கான விசாரணைக்கு நானும் வருமான பரிசோதகரும், தொழிநுட்ப அதிகாரியும் சென்றிருந்தோம். பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இயக்குனர் திரு.லோகதாஸ் அவர்களிடம் கூறி தோட்ட அதிகாரியுடன் கலந்துரையாடி அவ்விடத்தை பெற்றக்கொண்டோம். அத்துடன் வடிகாண் அனைத்தும் சபைக்கு சொந்தமானது. வடிகாணிக் மேல் கட்டிடம் கட்டியது அவர்களின் தவறு. வைத்த கடையை அகற்ற முடியாது. பொது சுகாதார பரிசோதகர் அது தொடர்பான அறிக்கையினை கொடுத்தால் அவ்விடயத்திற்கான மாற்று நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். ஏனென்றால் இது அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி, பின்னர் கணக்காய்வு அறிக்கைகள் வரும் போது நாம் தான் பதில் கூற வேண்டிய வரும்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக கௌரவ உப தவிசாளர் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் அவர்களினால் தபாலகத்திற்கு அண்மையிலுள்ள தீ இடைவெளி தொடர்பான விடயம் தொடர்பாகவும், மஸ்கெலியா மீன் கடை கழிவு நீர் மற்றும் வேன் தரிப்பிடத்திற்கு அருகிலுள்ள நடைபாதை அமைத்தல் தொடர்பான விடயங்கள் தொடர்பாக கருத்து முன்வைக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக நானும் எத்தனையோ முறை கூறியுள்ளேன், நடவடிக்கை எடுப்போம், பொது சுகாதார பரிசோதகரின் கடிதம் கிடைக்கப்பெற்றதும் இது தொடர்பாக முடிவு எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

சாமிமலை மீன் கடை தொடர்பாக கடிதம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சாமிமலை மீன் கடை தொடர்பாக கடிதம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

வாகன தரிப்பிடம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நல்லதண்ணி வாகன தரிப்பிடம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நல்லதண்ணி வாகன தரிப்பிடம் தொடர்பாக நான் தொழிநுட்ப உத்தியோகத்தரை தேடிப்பார்க்க கூறியுள்ளேன். நானும் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்துகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபைக்கான இடங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கவரவல பிரதேசத்தில் உள்ள மரக்கறி தோட்டத்தை தோட்ட நிர்வாகம் அறிவித்தலின்றி அழித்தமை தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

## 04. நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையில் ஆயர்வேத வைத்தியசாலைக்கான சில பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது, அத்துடன் சேர்த்து மருந்துசாலைக்கான மருந்துகளையும் கொள்வனவு செய்யும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

மஸ்கெலியா நகரினை நகர அபிவிருத்தி அதிகார சபையினரின் அதிகாரத்தின் கீழ் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள நகர அபிவிருத்தி சபையினருக்கு மஸ்கெலியா நகரை வழங்குவது தொடர்பான விடயம் கௌரவ உறுப்பினர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

மஸ்கெலியா பிரதேச சபை காரியாலயத்திற்கான பெயர் பலகை மற்றும் மஸ்கெலியா நகரத்திற்கு பிரவேசிக்கும் இடங்களில் பெயர்பலகை பொருத்துவது தொடர்பாக கௌரவ உறுப்பினர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

சிவனொளிபாதமலை பருவக்காலத்தின் போது கடமையாற்றும் சுகாதார கள உத்தியோகத்தர் ஓய்வு பெறவிருப்பதனால் அவருக்கு பதிலாக வேறு ஒருவரை கடமையில் நியமிப்பது தொடர்பாக விடயம் தொடர்பாக சபையில் கலந்துரையாடப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, அண்மையில் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மருந்துப்பொருட்கள் கொள்வனவு செய்தோம்.

**2022.12.01 திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசு பின்வருமாறு சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**

மஸ்கெலியா பிரதேச சபைக்கான கலி இயந்திரத்தை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அனுமதிப்பெற்றுள்ள கடன் தொகையினை இம்மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கான இறுதிக்கட்ட விடயங்களை மேற்கொள்வது தொடர்பாக விடயம் முன்வைக்கப்பட்டு அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 09**

மஸ்கெலியா பிரதேச சபைக்கென கலி இயந்திரத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட சிபாரிசுகளுக்கு அமைய விலைமனுகோரி தொழிநுட்ப சேவைகளின் அனுமதியினை பெற்று அதற்கமைவாக சபை அனுமதியினை பெற்று அதனூடாக கலி இயந்திரத்தை கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**2022.12.08 திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசு பின்வருமாறு சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**

நவம்பர் மாதத்திற்கான வரவு மற்றும் செலவு விபரங்கள் தனித்தனியே முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**

நவம்பர் மாத வரவு செலவு விபரங்களை நிதிக்குழு ஆராய்ந்து நவம்பர் மாத வரவு செலவு விபரங்கள் சரியானதென நிதி மற்றும் கொள்கை குழு ஏற்றுக்கொண்டது.

**விடய இல 02**
ஆயுர்வேத வைத்திய அதிகாரியினூடாக வைத்திய நிலையத்திற்கான Bed, Weight Machine மற்றும் ஏனைய சில பொருட்கள் என்பவற்றை பெற்றுத்தரும்படி கோரியுள்ள கடிதம் நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல 11**
மேற்படி கடிதத்திற்கு அமைவாக பொருட்களை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 03**
ZB – 0394இலக்கமுடைய கம்பெக்டர் இயந்திரத்தின் இருக்கைகள் பழுதடைந்துள்ளமை மற்றும் Speaker இயங்காமை என்பவற்றை திருத்தித்தருமாறு வாகன சாரதியினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 12**
ZB – 0394இலக்கமுடைய கம்பெக்டர் இயந்திரத்தில் மேற்குறிப்பிட்ட திருத்த வேலைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 04**
RF – 7744 இலக்கமுடைய டிரக்டர் வாகனத்தில் Bold joint தேய்வடைந்துள்ளமை தொடர்பாகவும் புதிதாக Bold joint இனை பொருத்துவதற்கான அனுமதியினை பெற்றுத்தரும் படி குறித்த வாகன சாரதியினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 13**
RF – 7744 இலக்கமுடைய டிரக்டர் வாகனத்தில் உள்ள திருத்த வேலைகள் தொடர்பாக தொழிநுட்ப குழுவின் சிபாரிசினை பெற்றதன் பின்னர் வாகனத்தை திருத்துவதற்கான வேலையை செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
சிவனொளிபாதமலை பருவக்காலத்தில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர பலகைகளுக்கான கட்டணம் அறவிடல் தொடர்பாக விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 14**
யாத்திரிகர்களுக்கான அறிவித்தல்கள் மற்றும் ஆகமம் தொடர்பான விடயங்களை தவிர்த்து ஏனைய விளம்பர பலகைகளுக்கு கட்டணம் அறவிட சபை அனுமதி வழங்கியது.

## 05. பிரேரணைகள்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் டி.வசந்தகுமார் அவர்களின் விசேட பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த காலங்களில் ஹெரண பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் இயங்கி வரும் தோட்டங்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளோம் அதில், இத்தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களில் அவ்தோட்டங்களிலுள்ள இளைஞர்கள் மரக்கறி செய்து வந்தார்கள் அதனை பலவந்தமாக தோட்ட நிர்வாகம் குறிப்பாக கவரவில தோட்ட முகாமையாளர் எங்களுடைய தோட்டத்தில் JCB இயந்திரத்தை கொண்டு அகன்ற முயன்ற போது கௌரவ உறுப்பினராகிய டி.வசந்தகுமார் நான் அதனை தடுக்க முயன்றபோது தோட்ட நிர்வாகம் எம்மீது பொலிஸ் முறையீடு செய்து அது மட்டுமல்லாமல் தோட்டத்தில் தொழில் செய்யும் பணியாளர்களை கட்டாயம் 18கிலோ கிராம் எடுக்கமாறு இது மாதிரியான பல்வேறு பிரச்சினைக்கு முகங்கொடுத்து வந்தோம்.

அதற்கு தீர்வு காணுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜீவன் தொண்டமான் ஐயா பார்வைக்கு கொண்டு சென்றோம், அதற்கு பிறகு 06 நாட்களாக அவ்விடத்திற்கு விரைந்து வந்து அவ் பிரச்சினைகளை தொழிலாளர் நீதிமன்றத்திற்கு சென்றும்

அது மட்டுமல்லாமல் தேயிலை தொழிற்சாலையில் தொழில் புரியும் நல்லையா சிவக்குமார் என்ற நபர் விபத்துக்குள்ளாகியதும் கண்டித்து அதற்குரிய நடவடிக்கையும் எடுத்து கொடுத்தனர். இவருக்கும் எமது சபையின் தவிசாளர் அவர்களுக்கும் கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் இந்திய வம்சாவளி மக்களின் சார்பாக தோட்ட பொது மக்களின் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நானும் இப்பிரச்சினையின் போது என்னால் முடிந்தளவான எனது பங்களிப்பை நான் வழங்கியிருந்தேன்.

## 06. ஏனைய விடயங்கள், விசேட அறிவித்தல்கள் மற்றும் எதிர்வரும் சபைக்கான திகதியை அறிவித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**